# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No. 25/2022

| | |
|---|---|
| Deposition of witness for | : PW7 |
| Name | : பூங்கொடி |
| Father's / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 4th day of November 2024.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது செட்டிப்பட்டியில் குடியிருக்கிறேன். இதற்கு முன்பு வடுவன்காடு, மாவெளிப்பாளையத்தில் வாடகை வீட்டில் குடியிருந்து வந்தேன். இறந்துபோன சேகர் எனக்குத் தெரியும். 1ம் எதிரி சேகரின் அப்பா. மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. 2021ம் வருடம் கொரோனா சமயத்தில் இறந்துபோன சேகர் பால் ஊற்றுவதற்காக வந்தார். அவர் எனது கணவரின் நண்பர். அவர் என் கணவரின் பள்ளித் தோழர். பால் வீணாக போகிறது வாங்கிக் கொள்ளுங்கள் என்று சேகர் கேட்டார். கேட்டதால் நாங்கள் பால் வாங்கினோம். என் மகன் கல்லூரி படிப்பிற்கு கடன்

வேண்டுமென்று சேகரிடம் கேட்டிருந்தோம். அவரிடம் ரூ.25,000/- பணம் வாங்கியிருந்தோம். அதன் பிறகு ஹாஸ்டல் செலவுக்கு ரூ.25,000/- சேகரிடம் வாங்கினோம். பணம் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்துவிடுவதாக சேகரிடம் சொல்லியிருந்தோம். எனது மகள் பெரியவள் ஆகிவிட்டார். அதனால் என் அக்காவை அழைப்பதற்காக மொடக்குறிச்சி சென்றோம். அப்போது என் கணவர் முத்துவேல் சேகருக்கு போன் செய்து ரூ.1000/- பணம் வேண்டுமென்று கேட்டார். ஆனால் அவர் இல்லை என்று சொல்லிவிட்டார். இரவு வீட்டிற்கு வந்துவிட்டோம். 03.03.2021 அன்று சேகரை யாரோ கொலை செய்துவிட்டார்கள், அவர் இறந்துவிட்டார் என்று அக்கம்பக்கம் உள்ளவர்கள் சொன்னார்கள். 6ம் தேதி சங்ககிரி போலீசார் என்னை விசாரணைக்கு அழைத்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன சேகர் எங்களுக்கு பால் ஊற்றுவது சம்மந்தமாக ஏற்பட்ட பழக்கத்தில் என்னுடைய தொலைபேசி எண் 9488505484 என்ற எண்ணை சேகர் கேட்டு பெற்றுக் கொண்டார் என்றும், பிறகு சேகர் அடிக்கடி எனக்கு தொலைபேசியில் என்னிடம் பேசுவார் என்றும், அப்படி பேசும்போது அவருக்கும் அவரது தகப்பனாருக்கும் இருந்த பிரச்சனையை என்னிடம் சொல்வார் என்றும், பிறகு நாங்கள் பேசியதை அவரது இறந்துபோன சேகரின் அக்கா மகன் கால் ரெக்கார்டு செய்து வீட்டில் சொன்னதால் அவருக்கும் அவரது தகப்பனாருக்கும் சண்டை ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை.

ஒம்/- L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.